ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி எ. பிரமோதூத ஹூ சித்திரைமீ பகுதி ச
Vol 7. *April & May 1930.* No. 4.

கம்பர் கடவுள் வாழ்த்து.

(64-ம் பக்கத்தொடர்ச்சி)

உணர்த்துவதற்குச் சக்தியற்றவனுயினும் அவனது கல்யாண குணங்களை வழுத்தினால் உஜ்ஜீவன ஹேதுவாமெனக்கருதிச் சொல்லத்தொடங்கினேனென்பது இச்செய்யுளின் விரிவுரையின் திரண்ட பொருளாம்.

முன்னிரண்டு செய்யுட்களால் முத்தொழிலுமுடையவனும், ஸத்வகுணமுள்ளவனும் எவனோ அவனே முதற்கடவுளாவானென்று நிரூபிக்கப்பட்டது. அம்முதற்கடவுள் ஹரிரூபியாகிய பரம்பொருளாமென்பதை *ஆப்த வசனத்தால் தெரிவிக்கிறார்:—

ஆதியந்தம் அரியெனயாவையும்
ஓதினாரலகில்லனவுள்ளன
வேதமென்பன மெய்ந்நெறிநன்மையன்
பாதமல்லதுபற்றிலர்பற்றிலார்.

இப்பாட்டிற்கு "அலகில்லன உள்ளன வேதமென்பன யாவையும் ஓதினார் பற்றிலார் ஆதியந்தம் அரி என மெய்ந்நெறி நன்மையன் பாதமல்லது பற்றிலர்" எனக் கூட்டிப்பொருள் கொள்ளத் தக்கது.

"ப்ரயோக ஹேதுபூத யதார்த்த ஜ்ஞானவான் ஆப்த:"
"ப்ரயோக ஹேதுபூத யதார்த்த ஜ்ஞானவான் ஆப்த:" சப்தப்பிரயோகத்திற்கு ஹேதுவாகிய உண்மையறிவுடையவன் ஆப்தனெனப்படுவான். அறிவுடையான் வாக்கியத்தின் அர்த்தத்தை உண்மையாக அறிந்தபின்பே அவ்வாக்யத்தைச் சொல்லத்தொடங்குகிறான். ஆகையால் அவ்வாக்கியத்தின் பிரயோகத்தில் அவ்வாக்கியத்தினது அர்த்தத்தின் உண்மையறிவே ஹேதுவாகின்றது. அந்த உண்மையறிவுடைய புருஷன் ஆப்தனெனப்படுவான்.

இதன் பொருள்:—சிறப்பித்துச் சொல்லப்படுகிற அளவற்றன வாயும் நித்யமாயுமுள்ள வேதமனைத்தையும் ஓதியுணர்ந்த பெரியோர்கள் அவ்வேதங்களில் "ஆதியில் எதனிடத்திலிருந்து உலகங்களுண்டாயினவோ? எதனால் அவை நிலைபெறுகின்றனவோ? முடிவில் எதன்கண் ஒடுங்குகின்றனவோ? அப்பொருளே முதற்பொருளாம்" என்று சொல்லியபடி உலகங்கள் தோன்றுதற்குக் காரணமான ஆதியாயும், அவை ஒடுங்குதற்கு இடமான அந்தமாயுமிருக்கிற ஹரிரூபியான இறைவனே யாமென்று தெளிந்து அவனுடைய திருவடிகளையே உபாயமாகப் பற்றுகிறார்கள்; என்பதாம்.

இனி இதற்கு விரிவுரை வருமாறு;—

வேதமென்னுதல் வேதமென்பன (வேதமென்று சிறப்பித்துச் சொல்லப்படுவன) என்றதனால் பிரத்யக்ஷ அநுமானம் முதலிய எல்லாப் பிரமாணங்களினும் வேதம் தலைசிறந்ததென்று வெளியாகிறது. இந்திரியங்கட்கு விஷயமாகாத பிர்ம்ம விஷயத்தில் வேதமே பிரமாணமாதலால் சிறப்புடையதென்னத் தட்டில்லை. வேதமென்பதற்கு அறியும்பயல்புடையதென்று பொருளாம். இது இன்ன காலத்திலறிந்ததுஎன்று அறியப்படாமையால் எக்காலத்திலுமுள்ளதெனவே ஒரு புருஷனால் செய்யப்படாததென்பதறியலாம். இதனால் தூய்மையுடையதென்பதும் தெளிவாம். புருஷன் முக்குணமுடையவனாகலால் மறதி வஞ்சனை மயக்க முதலியவற்றையுமுடையவனாயிருப்பான். இவனால் செய்யப்பட்ட நூல் தோஷமுடையதாயிருக்கும். இத்தோஷமொன்றும் வேதத்திற்கில்லையென்றறியத் தக்கது.

இனி, வேதமென்பதன் பொருளையே 'உள்ளன' என்றதனால் விளக்குகிறார். உள்ளன எப்பொழுதுமிருப்பன நித்யமென்றபடி வேதம் ஒலிவடிவினையுடையது. ஒலி மூன்று க்ஷணவரை நின்று மாய்வது. இது எவ்வாறு நித்யமாகுமென்னின்? சப்தம் அநித்யமாயிருந்தாலும் கல்பந்தோறும் †ஆநுபூர்வி வேறுபட்டிராமல் ஒரே ஆநுபூர்வியாக வழங்கப்படுதல்பற்றி நித்யமென்று சொல்லப்படும்.

† ஆநுபூர்வியாவது—முன்னுள்ளதைப் பின்னுள்ளது வொட்டியிருப்பது அஃதாவது—மாதவன் என்ற பதத்தில் ஆநுபூர்வியாவது மாவுக்குப்பின் தகாரமும், தகாரத்துக்குப்பின் வகாரமும், வகாரத்துக்குப்பின்னகரவொற்றுமாக அடுத்து நிற்பது.

மேலும், வேதம் இறைவன் வாயிலாகத்தோன்றியதென்று நூல்களிற் காணப்படுகிறதினால் வேதம் புருஷனால் சொல்லப்படாததென்று எவ்வாறு கொள்வதென்னின்; மஹா ஸம்ஹார காலத்தில் ஸர்வேசுவரன் வேதங்களையெல்லாம் ஒன்றொழியாமல் நினைத்துக் கொண்டிருந்து, சிருஷ்டி காலம் வந்தபின் அவற்றைப் பிர்ம்மாவுக்கு உபதேசிக்கின்றான். இம்முறையை யுட்கொண்டு ஸர்வேசுவரன் வாயினின்றும் வேதமுண்டாயிற்று என்று சொல்லப்பட்டதே யன்றிப் பிறிதில்லை. இதுபற்றி ஒருவனிடத்தினின்று வேதமுண்டாயிற்றென்று சொல்வதற்கியலாது.

அலகில்லன—அவ்வேதம் கணக்கற்றன. ‘அநந்தா வை வேதா:’ “அநந்தா வை வேதா:” என்பதும் காண்க. வேதவியாச பகவானால் வேதம் நான்காக வகுக்கப்பட்டுள்ளதென்பது யாவராலும் அறியப்பட்டதொன்றாதலால் அளவற்றனவென்பது யாங்ஙனமென்னின்? வேதம் ஓரளவின்றிப் பரந்துகிடந்தமைகண்டு ஓதுவாரும் ஓதுவிப்பாரு மருகிவிட அப்பொழுது ஸர்வேசுவரன் வியாச ரூபியாயவதரித்து, அத்யயனஞ் செய்பவர்கட்கு எளிமையாக ஒருவகையான் ருக் யஜுர் சாமம் அதர்வணம் என்றுமுறைப்படுத்தினாரேயன்றிப் பிறிதில்லை. இதனால் வேதம் நான்கென்ற வரையறையுடையதில்லை யென்றறியத்தக்கது.

யாவையும் ஓதினார்—வேத முழுமையும் ஓதியுணர்ந்தவர்கள் வேதங்கணக்கற்றனவாயிருக்குமாகில் அவற்றை முழுமையுமுணருமாறெங்ஙனமென்னின்? வேதம், பிர்மமத்தை யடைதற்குச் சாதனங்களையும், பிர்மமத்தினியல்புகளையும் உரைத்துச் செல்கின்றன. பிரம்மத்தினியல்பை யறியப்பெறுவரேல் அவர்வேததாத்பரியமறியப்பெற்றவராவார். அவரால் வேத முழுமையும் அறியப்பட்டனவாம். இங்கு, §உத்தாலகர் தம்புதல்வனாகிய சுவேதகேதுவை நோக்கி “யேநாவிஜ்ஞாதேந ஸர்வம் விஜ்ஞாதம்” “ஏகவிஜ்ஞாநேந

---

§அருணனுடைய புத்திரரான உத்தாலகருக்குச் சுவேதகேது என்ற ஒரு புதல்வனுண்டு இவனுக்குப் பன்னிரண்டு வயதாகியும் வறுமையின் கொடுமையான் உத்தாலகர் உபநயனஞ் செய்தாரில்லை. பின்பு அவர் வருத்தமுற்றுபுதல்வனைப்பார்த்து ‘அப்பா! நீஒருகுருவையடைந்து, பிரம்மசர்யவிரத

ஸர்வவிஜ்ஞாநம்" (ஒன்றையறிந்தால் எல்லாமறிந்ததாய்விடும்) என்றுரைத்ததும் அறியத்தக்கது.

பற்றிலார்—உலகப்பற்று சிறிதுமில்லாதவர்கள். ஆப்தராயிருப்பாரெல்லாம் இதரவிஷயப்பற்றற்றவராயிருத்தல்வேண்டும். பற்றுடையவராயிருப்பரேல் நடுநிலைமையுடையவராகார் நடுநிலைமையில்லாதவர்கள் உள்ளவாறுரைக்கமாட்டார்கள். இதுபற்றியே "நீத்தார்பெருமை" என்ற அதிகாரத்திற்குப் பொருளுரைக்க வந்தவிடத்துப் பரிமேலழகர் "முற்றத்துறந்த முனிவரது பெருமை கூறல். அவ்வற முதற்பொருள்களை உலகிற்குள்ளவாறுபதேசிப்பாரவராகலின்." என்றுரைத்தனர். ஆக, 'பற்றிலார்' என்றதனால் ஆப்த லக்ஷணமுரைக்கப்பெற்றதாயிற்று.

ஆதியந்தம் அரியென—ஜகத்துக்கு உபாதானகாரணம் ஈசுவரனாதலால் சிருஷ்டி காரணமாகியும், ஸம்ஹாரகாரணமாயுமிருப்பவன் ஹரியே என்று. இங்கு ஆதி என்பது சிருஷ்டியையும், அந்தம் என்

ஒழுக்கமுற்று அத்யயனஞ்செய்துவருவாய்' என்று கட்டளையிட்டனர். சுவேதகேது அக்கட்டளையைச் சிரசாகவஹித்து ஒரு குருவைத்தேடிப் பன்னிரண்டாண்டு குருகுலவாஸஞ்செய்து வேதங்களை அத்யயனஞ்செய்து வித்யையால் பூரணனானதாகத் தன்னைக்கருதி இருபத்து நான்காவது வயதில் பிதாவையடைந்தனன். உத்தாலகர் சுவேதகேதுவை அநுக்ரஹிக்கவேண்டும் என்ற கருத்தால் அவனை நோக்கி, எதைக்கேட்டால் கேட்கப்படாததெல்லாங் கேட்கப்பட்டதாய்விடுமோ, எதை மனனஞ்செய்தால் மனனஞ்செய்யப்படாததெல்லாம் மனனஞ் செய்யப்பட்டதாமோ, அப்படிப்பட்ட வஸ்துவை நீ அறிந்திருக்கிறாயா?' என்று வினவினர். அதற்கு விடையளிப்பதற்குச் சக்தியற்றவனாகிய சுவேதகேது 'இன்னும் குருகுலவாஸஞ்செயதுவரக் கடவாய்' என்று அனுப்பிவிடுவரோ என்ற அச்சத்தால் 'ஐய! நீர் கேட்ட கேள்விக்கு என்னுடைய ஆசார்யர் விடையளிக்கமாட்டாரென்று நினைக்கிறேன்; அவர் இதை அறிந்திருப்பரேல் எனக்கு அவசியம் உபதேசித்திருப்பார். ஆதலால் தேவரீரே அக்கேள்விக்கு விடையை உபதேசித்தருளவேண்டும். என்று வேண்டினன். உத்தாலகா அவனுக்குப் பிர்ம்ம வித்யையை உபதேசிக்கத் தொடங்கியவர் ஓர் திருஷ்டாந்தமெடுத்துரைத்தனர். அஃதாவது உபாதானகாரணமான மண்ணுருண்டையை அறிந்தால் அதன் காரியமான குடமுதலியவற்றெல்லாம் அறியப்பட்டனவாகின்றனவோ அதுபோலப் பிரம்மவஸ்து ஒன்றை மாத்திரமறிந்தால் எல்லாமறியப்பட்டதாய்விடும் என்றார்.

பது ஸம்ஹாரத்தையுமுணர்த்தும். முதல் இறுதியென்றால் முழுமையும் என்ற பொருள் கிடைக்குமாதலால் இடையிலுள்ள ஸ்திதி காரணத்தைச் சொல்லாதுவிட்டார். அன்றி உபலக்ஷணையால் ஸ்திதி காரணத்தைச் சொல்லிலுமாம். இன்னும் ஹரி என்பதற்கு ரக்ஷ்ய வஸ்துக்களாகிய அடியார்களின் பாபத்தைப் போக்கிக்காக்கின்றவன் என்ற பொருளுமுண்மையால் ஸ்திதி காரணத்தை ஹரி என்ற பெயர் மாத்திரத்தால் பெறவைத்தார் என்றுங்கொள்ளலாம். மேலும் ஆதியந்தம் என்பது முழுமையுமென்ற பொருளுடையதாய் "ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்" என்றபடி எக்காலத்தும் எவ்விடத்தும் எப்பொருளிலும் இடையறாதியங்குதலாகிய ஸர்வ வியாபகத்துவமும் குறித்து நின்றது. இப்பொருள் முதற்பாட்டில் பெறப்பட்டதேனும் இறுதியிலுங்கூறி வலியுறுத்தினாராயிற்று. பிர்ம்ம ருத்திரர்கள் சிருஷ்டி ஸம்ஹாரங்கட்குக் காரணர்களாயிருக்கினும், ஸர்வ சிருஷ்டி ஸர்வ ஸம்ஹார காரணத்வம் இவர்கட்கில்லையாதலால் அவை ஸாக்ஷாத் ஹரிரூபியான பகவானுக்கே உரியனவாமென்றறியத்தக்கது.

மெய்ந்நெறி நன்மையன்—உண்மையான உபாயமாயும் உபேயமாயுமிருப்பவன். நெறி-உபாயம். "நெறிவாசல் தானேயாய் நின்றானை" என்பதனாலறியலாம். நன்மையன்-ஆநந்தகுணமுடையவன். யாவராலும் விரும்பியடையப்படுவது நலமேயாதலால் நன்மையன் என்றதனால் உபேயம் உரைக்கப்பட்டது. உபாயமாவது-விரும்பிய பயனடைதற்குச் சாதனமாயிருப்பது. உபேயமாவது-விரும்பியடையும் பயனாயிருப்பது. யாகாதிகர்ம உபாயங்களால் ஸ்வர்க்காதி பலன்களையடைதல் நிலைபேறில்லையாதலால், இதனின் வேறுபாடு தோன்ற நிலைபேறுடையஉபாயத்தையும்உபேயத்தையும்'மெய்ந்நெறி நன்மையன்' என்றார். மெய் என்ற விசேஷணத்தை நெறி நன்மை என்ற இரண்டுக்கும் கூட்டுக.

ஸம்ஸார தாபாக்கினியினின்றும் நீங்கி நித்யாநந்த வாழ்வைப் பெறக் கருதுகிறவர்களும், எல்லாமறிந்த ஞானிகளும் இறைவனையடைதலாகிய பயனையே விரும்புகிறார்கள். ஸர்வேசுவரனும் அவர்கள் விரும்பியபடி தன்னை அநுபவிக்கும்படி அநுக்ரஹிக்கிறான். ஆக இறைவனிடத்தில் பலரூபத்வதர்மமே குடிகொண்டிருக்கிறது. இங்ஙனமிருக்க இங்கு உபாயத்வ தர்மமும் அவனிடத்திலுள்ள

தாக உரைப்பது எவ்வாறு பொருந்தும்? நதியைத் தாண்டிச்செல்லும் பிரயோஜனத்தில் விருப்பமுடையவன் ஓடமாகிய ஸாதனத்தைக்கொண்டு கடந்து செல்கின்றான். இங்கு நதியைத்தாண்டிச் சென்றவனுக்கு இஷ்ட ஸித்தியை ஓடம் தந்ததினால் ஓடம் உபாயமும், நதிக்கரை உபேயமுமாயின் ஆக உபாயத்வ உபேயத்வமென்ற இரண்டு தர்மங்களும் ஓரதிகரணத்திலின்றி வெவ்வேறிடத்தைப் பற்றிக்கிடக்கின்றமையறியலாம். மேலும், ஸ்ரீவசன பூஷணத்தில் "உபாயக்ருத்யத்தையும் தானே ஏறிட்டுக்கொள்கையாலே" என்று அருளிச்செய்யப்பட்டுள்ளது. ஏறிட்டுக்கொள்வதாவது—தனக்குரிமையில்லாத பிறிதொன்றன்றொழிலை மேற்கொள்வதாம். ஆதலால்இங்குஉபாயக்ருத்யத்தைத் தான் ஏறிட்டுக்கொண்டானெனவே ஈசுவரனுக்கு உபாயத்வம் இயல்பாகவில்லையென்பது தோற்றும்.

இஃதொருபுறமிருக்க; சரமசுலோகத்தில் கண்ணபிரான் "ஸர்வத⁴ர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ" "ஸர்வதர்மான்பரித்யஜ்ய மாமேகம் சரணம்வ்ரஜ" எல்லாத்தர்மங்களையும் விட்டு என்னை ஒருவனையே உபாயமாகப்பற்று என்று அருளிச்செய்தான். "த்வமேவோபாயபூ⁴தோ மே ப⁴வேதி ப்ரார்த²நாமதி: ஶரணாக³தி:" "த்வமேவோபாய பூதோமேபவேதி ப்ரார்த்தநாமதி: சரணாகதி:" நீயே எனக்கு உபாயமாக வேணுமென்கிற ப்ரார்த்தனாரூபமான புத்திவிசேஷமே சரணாகதி என்று சொல்லப்பட்டது. இன்னும் இவைபோன்ற பலவிடங்களிலும் ஸர்வேசுவரனே உபாயமாவானென்று உரைக்கப்பட்டுளது. மேலும் உபாயத்வம் உபேயத்வமென்ற இரண்டு தர்மங்களும் ஓரிடத்திலிருக்கலாகாதென்ற நிர்ப்பந்தமில்லை."புல்லைக்காட்டிப்புல்லையிடுவாரைப்போலே" என்ற வாக்யத்தை ஆராய்வோமாகில் தன்னிடத்தில் பசுவருவதற்குப் புல்லுபாயமாயிருந்து பின் அப்புல்லே அதற்கு உணவுப்பொருளாகின்றதினால் புல்லில் உபாயத்வ உபேயத்வம என்ற இரண்டு தர்மங்களும் இருக்கின்றமையறியலாம். அதுபோல ஸர்வேசுவரனிடத்தில் இவ்விரண்டுமிருக்கின்றனவென்றால் யாதொரு தோஷமுமில்லை.

அர்ஜுனன்,முன்பே கண்ணபிரானைநோக்கி உன்னையே உபாயமாகவடைகிறேன்' என்று பிரார்த்தித்த பின்பு கார்யஞ்செய்ய

வேண்டிய முறையிருக்க, அங்ஙனஞ் செய்யாமல் கண்ணபிரான் 'நாமே இவனுக்கு உபாயமாய் நின்று கார்யஞ்செய்வோம்' என்று தானே ஏறிட்டுக்கொண்டு, "மாமேகம் சரணம் வ்ரஜ......ஸர்வபா பேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்றருளிச்செய்தான்; என்ற இம் முறைபற்றி "உபாயக்ருத்யத்தையும் தானே யேறிட்டுக்கொள்கையா லும்" என்றுரைக்கப்பட்டதேயன்றி வேறில்லை. ஆகையால் உபா யத்வதர்மமும் ஸர்வேசுவரனுக்கு இயல்பாகவே உள்ளதென்றறியத் தக்கது. உத்தமாதிகாரிகளாயிருப்பார்கள் தமக்குத்தம்மாலும் பிற ராலும் பிரயோஜனமுண்டெனக்கருதாது 'இறைவனாலே பேறு' என்றிருப்பார்கள். அவனாலே பெறும்போது அவன் உபாயமாக வேண்டும். ஆத்மாவுக்குப் பாரதந்தர்யம் ஸ்வரூபமாதலால் பிராட் டியாருக்கு இராவணனைச் சபிக்குமாற்றலிருந்தும் சபியாதொழிந் தார். ஈசுவரனுடைய ரக்ஷகத்வ தர்மத்திற்குப் பொருந்தாதென்ற கருத்தால் அசோகவனத்தில் அநுமான் 'உம்மை இராமபிரான் சந்நி திக்கு அழைத்துக்கொண்டு போகிறேன்' என்றதற்குப் பிராட்டியார் இசையாதிருந்தார். இதனால் தமக்குத் தம்மாலும் பிறராலும் வரு கிற பிரயோஜனத்தைப்பொருட்படுத்தாது அவனால் வரும் பலத்தை யே எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். இதனாலும் இறைவனுக்கு உபாயத்வமுண்டென்பது நன்குதெளிவாம்.

பாதமல்லது பற்றிலர்—இறைவன் திருவடியல்லது பிறரொரு வரையும் உபாயமாகப் பற்றாதவர்கள்; அவனையே உபாயமாகப்பற் றியவர்களென்பதாம். இங்குப் பாதத்தைப்பற்றுவர்கள் என்னாது 'பாதமல்லது பற்றிலர்' என்றதனால் பிறருக்கு அடிமையாகாமல் இறைவனுக்கே அடிமையாயிருப்பவர்களென்ற சிறப்புப்பொருள் விளங்குகிறது. சாஸ்திரத்தை ஆராயுமிடத்து, பிர்ம்மா உலகந் தோன்று வதற்கு முன்பு உண்டானான், அவனால் சிருஷ்டிக்கப்பட்டவை கட்கு அவன் பதியாகவிருக்கிறானதலால் ஜீவர்கள் பிர்ம்மாவுக்கு அடிமையாகிப்பின் மாதாபிதாக்கள் பிதுரர் முதலானோர்களையும் தேவதைகளாகக்கொண்டொழுக வேண்டுமென்று விதிக்கப்பட்டுள தென்று வெளியாகும் இவ்விதியை மேற்கொண்டு ஜீவர்கள் பிரம் மாதிகட்கு அடிமையாயிருப்பதோடும். ஸர்வேசுவரனுக்கும் அடி மையாயிருக்கலாமா? அப்படி இருக்கலாகாதா? என்ற ஐயம் நிகழும்

ஜீவர்கட்குப் பிரம்மாதிகள் சரீர சிருஷ்டியைச் செய்தார்களென்ற கர்மோபாதியைப்பற்றி அவர்கட்கு ஜீவர்கள் அடிமையாயிருக்கத் தக்கவர்களென்று சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டுளது. ஆத்மாவின் உண்மை நிலையை நோக்கினால் ஸர்வேசுவரனுக்கே அடிமையா யிருக்கத்தக்கவனென்று புலனாகும். இதுபற்றியே லோகதேசிகன் உகாரார்த்தமருளிச் செய்யவந்தவிடத்தில் "ஸ்தானப்ரமாணத்தாலே உகாரம் அவதாரணார்த்தம் இத்தால் பிறருக்குச் சேஷமன்றென் கிறது. "......அதிலும் அந்யசேஷத்வகழிகையே ப்ரதாநம். தேவர்கட்குச் சேஷமான *புரோடாசத்தை நாய்க்கிடுமாபோலே ஈசுவரசேஷமான ஆத்ம வஸ்துவை ஸம்ஸாரிகட்குச் சேஷமாக்கு கை. பகவச்சேஷத்வத்திலும் அந்யசேஷத்வம் கழிகையே பிரதா னம்" என்று அருளிச்செய்தார்.

இனி, இப்பாட்டிற்கு அளவற்றனவாயும் நித்யமாயுமுள்ள வேதமனைத்தையும் பூர்வோத்தரசாந்தியாக ஆதியிலும், அந்தத் திலும் ஹரி: ஓம் என்று தொடங்கியும் ஹரி: ஓம் என்று முடித் தும் ஓதினராகி அவன் திருவடியையே உபாயமாகப் பற்றுகிறார்கள் பற்றற்ற அந்தணர் என்றுபொருள்கொள்ளினுமாம்.

இறைவனை வாழ்த்துவதற்கு அவனது இயல்பை ஒருவகையா லுணர்ந்து வாழ்த்தவேண்டுமென்பதைப் பற்றியே இந்த மூன்று பாடல்களுமெழுந்தமையால் இம்மூன்று பாட்டையும் ஒருமுடிபாக் கிப் பொருள்கொள்வதே பொருத்தமுடைத்தாம். அஃதாவது முத் தொழிலையும், ஸத்வகுணத்தையுமுடைய ஹரிரூபியாயுள்ளவனே முதற்கடவுளாவானென்பதாம்.

பட அ.

(தொடரும்.)

---

* புரோடாசம்—தேவருணவு.

ஸ்ரீ:

ஒரு மறுப்பு.

பங்குனிமீ 16உ (29—3—30) தேதி வெளியான சுதேசமித்திரன் பத்திரிகையில் "மூலபாடமும் உரைகளும்" என்ற தலைப்புடன் தகளன் என்ற புனைபெயர்கொண்டு திருவாய்மொழியின் பாடபேத விஷயமாய் ஒருவரெழுதிய கட்டுரையைக் கண்ணுற்றேன். இதற்கு முன்னும் தகளன் திவ்யப்ரபந்த விஷயமாயும், பிற விஷயமாயும் எழுதிய கட்டுரைகளை யான் ஊன்றி நோக்குவதுண்டு. அவற்றால் தகளனைப்பற்றி யான் கொண்டிருந்த ஒருவகை மதிப்பை இக்கட்டுரை பெரிதும் அலைத்துவிட்டதென்று சொல்வது மிகையாகாது. விஷயமென்னவெனில் மேலெழுந்தவாரியான ஆராய்ச்சியுடன் இவ்விஷயத்தில் தகளன் முடிவு கூறப்புகுந்துவிட்டமையே. முடிவுகள் பெரிதும் முரண்பாடுடையனவாய்க் காணப்பட்டமையால் அவற்றிற்கு ஈண்டு மறுப்பெழுதப்படுகிறது.

(1) "அணங்கென ஆடும் என்னங்கம், வணங்கி வழிபடுமீசன், பிணங்கி அமரர்பிதற்றும், குணங்கெழு கொள்கையினானே" என்றுள்ளது முதற் பத்து ஆறாந்திருவாய்மொழியின் நான்காம் பாட்டுள் இதன் உரையாக ஆறாயிரப்படியிலுள்ளது இது. "அயர்வறுமமரர்கள் அக்ரமமாகக்கொண்டு அநுபவிக்கிற கல்யாண குணங்கள் சேருகைக்குக் கொள்கலனாய் ஸர்வேஸ்வரனான எம்பெருமானை நான் அநுபவித்து ப்ரீத்யத்தாலே தைவாவிஷ்டரைப்போலே அக்ரமமாக நின்றாடி அவனை வணங்கி அடிமை செய்யும் இதுவே ஸ்வபாவமாகப் பெற்றேனென்கிறார்." இவ்வுரையினின்றும் பாசுரத்தின் நான்காமடி "குணங்கெழு கொள்கலனானே" என்று இருக்கவேண்டுமென்றும் ஊகிக்கலாம். இதுவே சரியான பாடமாயின் அடுத்த பாசுரமும், "கொள்கல் கொளாமையிலாதான், எள்கல் இராகமிலாதான், விள்கல் விள்ளாமை விரும்பி, உள் கலந்தார்க்கு ஓரமிர்தே என்று இப்பொழுதுள்ள பாடத்திலும் கருத்

திலே மாறுபடாமலும் சொல்லின் அதிக அழகுபெற்றும் மாறிவிடும்.

---

(1) இவர் இவ்வாறு கூறுதற்குக் காரணம். "குணங்கெழு கொள்கையினன்" என்ற வடிக்கு உரையாக ஆறாயிரப்படியில் "கல்யாண குணங்கள் சேருகைக்குக் கொள்கலனை (கொள்கலமாயென்றே அச்சுப்பிரதியிற் காணப்படுகிறது) என்ற பகுதியே போலும் கொள்கை என்ற சொல்லுக்கு கொள்ளுதல் என்றும், ஆகுபெயராற் கொள்ளுமிடமென்றும் பொருள்கொள்ளலாம். இவ்வுரைகாரர் ஆகுபெயர்ப் பொருளைக்கொண்டனர். ஒன்பதினாயிரவுரையிலும் "குணங்கள் சேருகைக்குப் பாத்திரமாயுள்ள ஸர்வேஸ்வரன்" என்றுள்ளது. மூலத்துக்குத் தெளிவு ஏற்படுமாறு ப்ரதிபதமெழுதுதல் உரையாசிரியர்க்கு வழக்கேயன்றிப் பலபொருட்கும் பொதுச்சொல்லாகிய மூலத்தைத் திரும்ப எழுதுதல் வழக்கன்றாம். அவ்வாறெழுதின் அவ்வுரை பயனின்றி முடியும் ஆகலால் "கொள்கை" என்ற சொல்லின் (கொள்ளுதல், கொள்ளுமிடமென்று இருபொருள் படுகின்ற) பொதுமை நீங்கித் தெளிவுறுமாறு "கொள்கலம்" என்று விளங்கப் பொருளெழுதிச்சென்றனர். இங்குத்தாகளன் தம்முடைய ஸௌகர்யத்தின் பொருட்டு கொள்கலன் என மகரத்தை னகரமாக்கிக்கொண்டார்போலும் இனி மற்றையுரைகளைக் கவனிப்போம்.

பன்னீராயிரப்படி யுரைகாரர் "கொள்கையினன்" என்பதற்குக் "கோட்பாட்டையுடையவன் கிடீர்" என்று கூறி "கொள்கையென்று—ஆச்ரய விஷயமாகவுமாம்" என்கிறார். இருபத்திநாலாயிர வுரைகாரரும் இப்பகுதிக்கு "ரத்நாகரம்போலே குணங்கள் வந்து சேருகைக்கு ஆச்ரயமாயுள்ளானென்னுதல்" இக்குணங்கள் வந்து கெழுமுகையை ஸ்வபாவமாகவுடையானென்னுதல்' என்று இருவகையாற் பொருள்கூறி மேலும் விரிவுரை கூறுகிற்பர்.

ஈட்டிலும் அவ்வாறே இருபொருள் கூறப்படுகிறது. அரும்பதங்களிரண்டிலும் முதலர்த்தத்தில் (ஆச்ரயமானவன்) கொள்கலமானவன் என்றும், இரண்டாமர்த்தம் கொள்கையினன்—ஸ்வபாவமாகவுடையனென்றுங் கூறப்படுகின்றது.

ஆறாயிரப்படியில் ஒரு பொருளே குறிக்கப்பட்டது. அது கொண்டு கொள்கலனென்றுகொண்டால் மற்றையுரையாளர்கள் கூறிய இரண்டாம்பொருள் ஒருவாற்றானும் பெறப்படாது. "கை" என்பதனை விகுதியாகக்கொள்ளாது சொல்லாகக்கொண்டாலும் இடமென்றும், சீலம் (தன்மை) என்றும் பொருளுண்டு. அதனால் "கொள்கை" கொள்ளுமிடமென்றுரைத்தற்கு ஒரு குறையுமில்லை. "கையிடம் படையுறுப்பொப்பனை செங்கை சிறுமை சீலம்" என்பது சூடாமணி நிகண்டு. இவற்றால் துகளன் கூறும் 'கொள்கலனை' என்ற பாடம் ஒருவாற்றானும் பொருந்தாது. "கொள்கலன்" என்பதற்கு கொள்கலமாகவுடையன் என்றபொருள் எவ்வாறு பெறப்படும்? நலம், கலம் முதலிய சொற்கள் விகுதியோடு சேரும் பொழுது நலத்தான் கலத்தான் என முடிவதன்றி நலனன் கலனன் என முடிவதாய் எங்கும் காணவில்லை. இதனால் அடுத்த செய்யுளை மாற்றவேண்டியதுமில்லை. கொள்கல் விள்கல் என்று மாறாது கொள்கை விள்கையென்று இப்பொழுதுள்ளவாறே யிருந்தால் அழகுக்கு என்ன குறையோ?

---

(2) இதுபோலவே இதே திருவாய்மொழியின் ஒன்பதாம் பாசுரத்தையும் "தரும் அவ்வரும்பயனாய, திருமகளார் தனிக்கேள்வர்; பெருமையுடைய பிரானார், இருமைவினை கடிவாரே" என்று ஆறாயிரப்படியாலே மாற்றிக்கொள்ளுதல் தகும். ஏனெனில் அவ்வுரையிலே "ப்ரதிபந்தங்களைப்போக்கி அந்தப் பெருதற்கரிதான சம்பத்தைத் தந்தருளுமிடத்தில் பிராட்டியோடே கூடநின்று தந்தருளுமென்கிறார் என்று காணப்படுகிறது. இவ்வாறின்றி இப்போது அச்சிலே காணப்படும் பாடபேதத்தை ஏற்றுக்கொண்டால் "அவ்வரும்பயனாய்தரும்" என்றும் ஆறாயிரப்படிக்கருத்துக்கு இடமில்லை. "தருமவ் வரும்பயனாய திருமகளார்" என்று பிற்காலத்து உரைகாரர்கள் கொண்டது, இவ்வாறு மழுங்கிய பாடபேதத்தைக் கொண்டேபோலும்.

---

(2) மேற்பாட்டில் "கழிமின் தொண்டீர்கள் கழித்துத்தொழுமின் அவனைத்தொழுதால், வழிநின்ற வல்வினை மாள்வித்து அழிவின்றி ஆக்கந்தருமே என்றுகூறி "தருமவரும் பயனாய திருமக

ளார்'' என்று மேலே செல்லுகின்றது. ஆறுயிரப்படியிலும் ''ஸ்வ விஷய கைங்கர்ய ப்ரதிபந்தகமான உங்கள் வினைகளைப்போக்கி நித்ய ஸித்தமான அந்தக்கைங்கர்யரூப மஹாஸம்பந்தத்தைத் தந்தருளு மென்கிறார். (மூன்பாட்டுரை) என்றுரைத்து, இப்பாட்டுக்குப் பொருள்கூறுமிடத்தில் முற்பாட்டின் பொருளை அநுவதித்து ''ப்ரதிபந்தங்களைப்போக்கி அந்தப் பெறுதற்கரிதான ஸம்பத்தைத் தந்தருளுமிடத்தில் பிராட்டியோடே கூட நின்று தந்தருளுமென் கிறார்'' என்று கூறப்பட்டுளது.

மேற்பாட்டில் ''கழிமின், கழித்து தொழுமின், தொழுதால்'' என்று அநுவதித்துக் கூறித் ''தரும்'' என்று முடித்து அதனையே ''தரும்'' என்று அடுத்தபாட்டில் அநுவதிக்கிறார். இவ்வநுவாதங் களுக்கெல்லாம் கருத்துக்களை நயம்படக்கூறிச் செல்கின்றனர் உரை காரர்கள் வல்வினை மாள்வித்து ஆக்கந்தருதல் பிராட்டியின் சேர்க் கையால் (புருஷகாரத்தால்) ஆறுயிரப்படி ''தரும்'' (தருவான்) எத னால்? திருமகளார் தனிக்கேள்வனுதலால் என்றும், அவ்வரும் பய னுயதரும் திருமகளார் கேள்வனுதலால் தருதற்குக் குறைவில்லை என்றும், அவ்வரும் பயனுய தரும் (தருவான்) திருமகளார் தனிக் கேள்வனுதலால் என்றும், தரும் (தருவான்) அவ்வரும் பயனுய திருமகளார் கேள்வன் (ஆதலால்) என்றும் தருமத்தின் அரியபய னுய திருமகளார் கேள்வனுதலால் தரும். (முன் பாட்டின் முடிவு. அநுவாதம்) என்றும் பலவகையாற் பொருள் கொள்ளப்படுகிறது.

ஆறுயிரப்படி மிகவும் சுருங்கிய வுரையாதலால் அதனையும் மூலமாகவே கொண்டு பொன்னேபோற் போற்றி, அதற்கு விரோ தம் வராமலே மற்ற உரைகாரர்கள் உரை கூறிச்செல்கின்றனர். ''தரும்'' என்பது முன் பாட்டிற்கிடைத்தமையால்''தருமவரும் பய னுய என்பதற்குத் ''தருமத்தின் அரியபயனுய திருமகளார் என்றும் ஒருவாறு கொள்ளப்பட்டது. இது துகளன் கூறியவாறு ஆறுயிரப்படியோடு ஒரு விதத்திலும் விரோ திக்கவில்லை. ஆறுயிரப்படியின் நோக்கமெல்லாம் திருமகளார் கேள் வன் என்பதிலேயே. துகளன் இது மழுங்கிய பாடமென்கிறார். பாடம் ஒன்றும் மழுங்கவில்லை. துகளனது ஆராய்ச்சியே இங்குச்

சிறிது மழுங்கிவிட்டது. நிற்க, மகரவுயிர் மெய்யை மெய்யாகவும் உயிர் மெய்யாகவும் நிறுத்திப் பொருள் கொள்ளப்பட்டாற் பாடபேத மெங்கேயுள்ளது? பிற் காலத்து உரைகாரர்களென்கிறார். இவ்வுரைகளெல்லாம் அடுத் தடுத்துத் தோன்றியவைகளே. பாடந்தவறிவிடத்தக்கவாறு கால விடையீடில்லை. "ஓரான் வழியாய்வந்த உபதேச பரம்பரையில் இவ்வாறு பாடந்தவறுதற்குச் சிறிதுமிடமில்லை. இனித் தங்கள தனிக்கேள்வனென்பதை "தருகேள்வன்" என்று திருத்துகிறார். ஏனென்றால் "ஸம்பத்தைத்தந்தருளுமிடத்தில் பிராட்டியோடேகூட நின்று தந்தருளுமென்கிறார்" என்ற ஆறாயிரப்படியினர்த்தம் இத னாற் கிடைக்கவில்லையாம். தரும் என்று முற்பாட்டின் முடிவிலும் இப்பாட்டின் தொடக்கத்திலும் ஆக இரண்டுமுறை சொல்லியிருப் பது இப்பொருள் கொள்ளுதற்குப் போதவில்லைபோலும். மூன்று முறை சொல்லவேண்டுமென்று நியாயம் யாண்டுளதோ? "தனிக் கேள்வன்" என்பதற்கு ஒன்பதினாயிரப்படியில் "குணாதிகனுயுள்ள (சிறந்த) நாயகன் என்றும்," பன்னீராயிரப்படியில் "அத்விதீயப்ர ணயி" என்றும், இருபத்துநாலாயிரப்படியில் "அத்விதீய வல்லபன் என்றும் ஈட்டிலும், அரும்பதவுரைகளிலுங்கூட இவ்வாறே தனிக் கேள்வனென்றேகொண்டு உரைகூறியிருக்கஇதனைத்திருத்துவதெவ் வாறு? மூலத்தை அச்சிடுவோர்க்கு உரைகள் மிகவும் உதவுவன என்பதைக் காட்டவந்த இவர் தாமே மூலங்களைத் திருத்தப் புறப் படுகிறார். இதற்கு உரைகளின் உதவி வேண்டுவதில்லைபோலும். தனிக்கேள்வன் என்றதின் சொல்நயமும் பொருட் சிறப்பும் தங்கள ளுக்குப் புலப்படாமற்போனது வருந்தத்தக்கதே. ஆனால் தங்களன் 'தரு' என்ற சொல்வேண்டுமென்று திருமகளார் என்பதைத் தரு மகளாரென்று திருத்தப் புறப்படாமலிருந்தது நல்லகாலமே.

---

(3) இப்படியே ஏழாம்பத்து மூன்றாம் திருவாய்மொழியிலே உள்ள பாசுரங்களிலே 'திருப்பேரை' என்றிருப்பதெல்லாம் "திருப் பேரெயில்" எனறே இருக்கவேணடும் என்பது ஈட்டின உரையாலே நன்கு விளங்குகின்றது. ஒன்பதாம் பாட்டின் ஆறாயிரப்படி யுரை யிலோ என்னோடு ஸம்ஶ்லேஷிக்கைக்காக அவன்வந்து எழுந்தருளி

யிருந்த 'தென் திருப்பேரெயிலைச் சேர்வன் சென்று' என்கிறுள் என்று காணப்படுவதும், ஈட்டிலே திருப்பேரெயிலாகிற மாநகரிலே சென்று சேர்வன் என்று காணப்படுவதும், இவற்றிற்கநுகூலமாக மூலத்திலும் "தென்திருப்பேரெயின் மாநகரே" என்றிருப்பதும் இதுவே மற்றைப்பாசுரங்களுக்கும் பாடமாகவேண்டுமென்பதைக் காட்டுகின்றன.

---

(3) எல்லா மூலப்பிரதிகளிலும் உரைகளிலும் தென் திருப் பேரையென்றே காணப்படுகின்றது. ஒன்பதாம் பாட்டில் மாத்தி ரம் இரண்டொரு பிரதியில் "தென் திருப்பேரெயின் மாநகரே' என்று பாடபேதம் காட்டப்பெற்றுளது. இரண்டொரு உரைகளி லும் அப்பாட்டில் தென திருப்பேரெயில் என்று காண்கின்றது. ஆறுயிரப்படியில் தென் திருப்பேரையிலே சேர்வன் என்றே யுள் ளது. 5, 6, 7, இம்மூன்று செய்யுட்களிலும் பேரையிற்கே என்று ஏழு நான்குமாகிய இரண்டுவேற்றுமையுருபுகளும் வந்துள்ளதனுல் அவ்விடங்களில் பேரெயில் என்றிருக்கலாமென்று ஊகிக்கலாம். ஆயினும் "அணியரங்கத் திருமுற்றம்" "அரங்கமாளிகை" என்பன போலப் பேரையில் என்பதே பழைய வழக்கோ என்றெண்ணவும் இடமுண்டு ஆதலால் இதைக்கொண்டு எல்லாம் பேரெயில் என்றே இருக்கவேண்டுமென்ற நியமமில்லை. ஏனெனில் உறையூர் உறந்தை யென்றும், அருணகிரி அருணையென்றும் மருவி வழங்குதல்போல பேரெயில் பேரையில் என்பவற்றைப் பேரையென வழங்கத்தடை யொன்றுமில்லை இவ்வாழ்வாரே பத்தாம்பத்து, எட்டாம திரு வாய்மொழியில் எல்லாப் பாசுரங்களிலும் "திருப்பேர்" என்றே வழங்கியுள்ளார். பிறரும் அவ்வாறே "பேரையென்றும் பேர் என்றும் வழங்குவர். அவற்றையெல்லாந் தகளன் திருத்தப் புகு வது இயலாத காரியம்.

---

(4) ஏழாம்பத்து ஏழாந்திருவாய்மொழியினைக் கவனித்தால் அவை நான்காம் பாசுரம் "கண்ணபிரான் புருவமவையே, என்னு யிர் மேலனவாய், அடுகின்றனவென்றுநின்றே, என்று முடிகின்

றது. அடுத்த பாசுரம், "என்று நின்றே திகழும்செய்ய, ஈன்சுடர் வெண்மின்னுக்கொல்" என்று தொடங்குகின்றது.

இவ்வாறுள்ளதிலே அந்தாதி அழகு முதிர்ச்சி பெறவில்லை. இவைகளின் உரைகளான ஆறாயிரப்படியின் பகுதிகளைக் கவனித்தால் அங்கு இவை என்னுடைய பிராணன்களை எப்போதும் பாதிக்கின்றன என்கிறாள் என்றும், 'தோன்றி மறையாதே என்றும் நின்று விளங்காநின்று சிவந்தசுடரை ஈனாநின்ற வெள்ளை மின்னோ? என்றும் காணப்படுகின்றது. இவ்வுரைப் பகுதிகளினின்றும் நான்காம் பாசுரத்தின் ஈற்றடி "என்னுயிர் மேலனவாய், அடுகின்றன நின்று நின்றே" என்றும் ஐந்தாம் பாசுரத்தின் முதலடியும் "நின்று நின்றே திகழும் செய்ய, வீன்சுடர் வெண்மின்னுக்கொல் என்றும் பாடமாகவேண்டுமென்பது ஊகிக்கக்கிடக்கின்றது. இவ்வூகம் ஸ்ரீமான் சக்கரவர்த்தி ராஜகோபாலையங்கார் அவர்கள் ஆராதனையிலேயுள்ள திருவாய்மொழி ஸ்ரீகோசத்தாலே நேர்மையுடையதென எனக்குத் தெரியவந்தது.

---

(4) என்னவூகம்! "என்றுநின்றே" என முடிந்து "நின்று நின்றே" தொடங்குவதில இல்லாத அழகின் முதிர்ச்சி "நின்று நின்றே" என முடிந்து "நின்று நின்றே" என்று தொடங்கிவிட்டால் எவ்வாறு கிடைத்துவிடுகிறதென்பது தெரியவில்லை. இவரது அந்தாதி அழகு கானல்நீர்போன்றதுபோலும் அல்லது "எ" என்பது "நி" என்று மாறிவிட்டால் அந்தாதியில் அழகு முதிரும் என்று எங்கேனும் இலக்கணங் கூறப்பட்டுளதோ? யாமறியோம்.

இனி இவற்றின் உரைகளை நோக்குவோம். இவை என்னுடைய பிராணன்களை எப்போதும் பாதிக்கின்றன தோன்றி மறையாதே என்றும் நின்று விளங்காநின்று சிவந்தசுடரை ஈனாநின்ற வெள்ளைமின்னோ" ஆறாயிரப்படி என்றும் ஒருபடிப்பட நின்று நலியாநின்றன" "ஒருபடிப்பட நின்று விளங்கக்கடவதாய்(ஒன்பதினாயிரப்படி) பாதகமாகாநிற்கச்செய்தேயும், அநித்யமாயிருப்பன

சில பதார்த்தங்களுண்டிறே? இவை அங்ஙனன்றிக்கே என்று மொக்க நின்று நலியா நின்றன "என்று மொக்கமாறாதே விளங்கா நிற்பதாய்" என்று இவ்விரு தொடர்கட்கும் பொருள் காணப் படுகிறது. (ஈடு)

இவ்வுரைகளால் எவை சரியான பாடமென்பதை அறிஞர்களே ஊகித்துக்கொள்ளலாம். நின்று நின்று என்பதற்குச் சிலபொழுது நின்று சிலபொழுது மறைந்து என்றே பொருளாம். ஆயிரம் முறை நின்று நின்று எனறடுக்கினும் என்று நின்று என்றதன் பொருட் சிறப்பு எவ்வாறு பெறப்படும். "என்னுயிர் மேலானவா படுகின்றன என்று நின்றே" "என்று நின்றே திகழுஞ்செய்ய ஈன்சுடர் வெண் மின்னுக்கொல்" என்று இரண்டு இடங்களிலும் மோனையழகும் கவனித்தற்பாலது துகளன் கூறியவாறு மாற்றுவதனால் அம்மோனை நயமும் இல்லையாபொழியும் இப்பாடபேதம் ஏதோ ஒரு பிரதியால் தெரியவந்ததென்கிறார். அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை.

(5) எட்டாம்பத்து இரண்டாந்திருவாய் மொழியின் இறுதிப் பாசுரத்தின் ஈற்றடி "ஆதும் ஓர் தீதிலராகி இங்குமங்குமெல்லாம் அமைவார்கள் தாமே என்றுள்ளது. அடுத்த திருவாய்மொழி அங்குமிங்குமென்று தொடங்குவதினின்றும் இவ்வீற்றடியிலும் அங்கும் இங்கும் என்று இருக்கவேண்டுமென்று எனக்குத்தோற்றியது. அந்தப்பாசுரத்தின் உரையிலே ஆறாயிரப்படிகாரர் "இத்திருவாய் மொழியை வல்லார் நிரஸ்த ஸமஸ்ததுக்கராய் அங்கும் இங்கும் எல்லாப்படியாலும் பரிபூர்ணர் என்கிறார் என்று உரை காண்பதாலே இந்தப்பாடமே திருத்தமானதென்று கொள்ளவேண்டும்.

---

(5) நித்ய விபூதியினும் லீலா விபூதியின் சிறப்புக்கருதி அங்கும் இங்கும் என்று (உரையின் ஸௌகர்யத்தை நோக்கி) ஆறாயிரப் படியில் மாற்றிக்கொண்டார். அங்குமிங்குமென்ற அடுத்த பாசுரத்தின் சொற்கிடக்கையையே உரை நடையிலமைத்துக்கொண்டாரெனினும் இழுக்கில்லை. ஆழ்வார் பிரத்யக்ஷமாகிய இம்மையை முற்கூறி அப்ரத்யக்ஷமாகிய வீட்டினைப் பிற்கூறினர். கருத்தைத் திரட்டியுரைக்கும் ஆறாயிரப்படியின் சொற்கிடக்கைகொண்டு மூலத்தின் சொற்கிடக்கையை மாற்றத்துணிவது பெருந்தவறு.

“இங்குமங்கும்—இந்த விபூதியிலும் அந்த விபூதியிலும்” என்று பன்னீராயிரப்படியிலும் “இஹலோகத்தோடு பரலோகத்தோடு வாசியறக் குறைவற்றிருப்பார்கள்” என்று ஈட்டிலும் உரை காணப்படுகிறது. அன்றியும் இது எண்சீராசிரியவிருத்தம். இதனை முன் நான்குசீர் ஒரு நிறுத்தாகவும் பின் நான்குசீர் ஒரு நிறுத்தாகவும் படிப்பது வழக்கம். ஈங்கு ஓசையின்பம் பயக்கப் பின் நிறுத்தின் தொடக்கமாகிய ஐந்தாம் சீரில் “அங்கும்” என மோனை அமைந்துள்ளது. எடுத்தலோசை பொருந்திநின்ற அச்சொல்லையே அடுத்த செய்யுளின் ஆதியாய்த் தொடுத்தார். இதிலிழுக்கென்னை? “இங்கும்” என்பது அச்செய்யுளில் இயல்பாயமைந்த சொல்லையன்றி அந்தாதிக்காக முன் பாட்டிலிருந்து வந்ததன்று. இனி “இங்குமங்கு” மென்பது “அங்குமிங்கு” மென்று மாறியும் அந்தாதியிலமையலாமென்று தோன்றுகிறது. அது இன்னும் சில வழக்குகளைக்கொண்டு தீர்மானிக்கத்தக்கது. “இரவு நன்பகலும் விடாதென்று மேத்துதல் மனம் வைம்மினோ”(3-6-3)“வைம்மினும் மனத்தென்று” (3-6-4) என்பதுபோன்ற இடங்களை அவ்வாறு கொள்ளலாம். இனி இங்குமங்குமெல்லாம் அமைவார்கள் தாமே என்று இருப்பதற்கேற்ப அடுத்த திருவாய்மொழி இங்குமங்கும் வானவர் தானவர் யாவரும் என்றிருக்கவேண்டும் என்று துகளன என் ஊகிக்கலாகாது?

---

6. இதுபோலவே மூன்றாம்பத்து ஆறாந் திருவாய்மொழியிலே உள்ள எட்டாவது பாசுரம்.

“தீயரமேதரு துன்பவின்ப வினைகளாய்
அவையல்லனாய்
உயரநின்றதோர் சோதியாய் உலகேழும்
உண்டுமிழ்ந்தான் தன்னை
அயரவாங்கு நமன்தமர்க்கு அருநஞ்சினை
அச்சுதன் தன்னை

தயரதற்கு மகன் தன்னை யன்றி
மற்றியேன் தஞ்சமாகவே.

என்று காணப்படுகின்றது. இங்கு இன்பவினை துன்பவினையி லும் கேடுவிளைப்பது; ஏனெனில்? அது துயரமே தருவது என்று த்வன்யார்த்தமாகக் கொள்வதற்கிடமில்லை. அவ்வாறான அழகிய கருத்துக்கு இடந்தரும் பாடமாகும் "துயரமேதரு இன்பவினை களாய்" என்பது இவ்வாறு பாடத்தைத் திருத்திக்கொள்வதற்கு ஆறுயிரப்படி முதலிய உரைகள் இடக்தருவன. "ஸ்வாதீனபுண்ய பாபஸ்வரூபனாய்"—என்பது ஆறுயிரப்படியுரை. ஒன்பதினாயிரப் படியும் துக்கைகஹேதுவான புண்யபாபரூப கருமங்களுக்கு நியாமகனாய்' என்று உரைகூறும் 'துயரமே தரு இன்பம்' என்பதை யே மேற்கொண்டதாக பன்னீராயிரப்படியும் "துக்கஸாத்யத்வ, துக்க மிச்ரத்வ, துக்கோதர்க்கத்வ, விசிஷ்டமாகையாலே நிஷ்க் ருஷ்ட பரிதாபகரமான ஸுகத்துக்கும் 'துன்பம்' துக்கத்துக்கும் ஹேதுவான என்று அமைகின்றது. இருபத்தினாலாயிரப்படி யிலும் துக்கைகஹேதுவான புண்யபாபரூப கர்மங்களுக்கு நியா மகனாய்" என்று உள்ளது. இன்பவினையும் துக்கத்தைத் தரும் என்பது ஆழ்வார் அபிப்பிராயமென்று ஈட்டுரைகாரரும் விளக்கு வதாலே "துயரமேதரு இன்ப துன்பங்களாய்" என்பதுவே நேரான பாடமாகுமன்றோ?

---

6. "துயரமேதரு" என்ற அடைமொழிக்கேற்ப இங்கு ஆழ் வார் துன்பம் இயல்பாகவே துன்பமாதலால் அதனை முன்னும்,துன் பத்தினலெய்தப்படுதலும் துன்பத்தின் கலப்பும் துன்பங்தீர்ந்து நீங்குதலுமாய் எப்பொழுதும் துன்பமாய் முடிதலால் இன்பத்தை அதன்பின்னும் வைத்து "துயரமேதரு" என்பதுடன் இரண்டுக் தனியே கூடி இரண்டுந்துன்பமே தருவன என்று விளங்கவைத் தார். இச்சொற்கிடக்கையால் தமது அழகிய கருத்துக்கு இட மில்லை என்று மயங்கி தகளன் மிகவும் வருந்துகிறார் "இன்பவினைத் துன்ப வினையிலுங் கேடுவிளைப்பது; ஏனெனில் அது துயரமே தரு வது என்கிறார். ஆபின் துன்பவினை சிலபொழுது இன்பமும் விளைக்கும்போலும்! பொழிப்புரையாகத் திரட்டிக்கூறுகின்ற வுரை

யாளர் சிலர் சிறப்புப்பற்றிப் புண்ணியத்தை முன் வைத்துப் "புண்ணிய பாபம். "புண்ணிய பாபரூபகர்மங்கள்" என்றெழுதிச்சென்றனர். "புண்யம் பாபம் புணர்ச்சி பிறிவென்றிவையாய்" என்று ஆழ்வாரும் பின்னோரிடத்திற் கூறியருள்வர். அங்கு நோக்கம் வேறு, செய்யுட்களிற் பல காரணங்களாற் சொற்களை முறை பிறழ வழங்குவதுண்டு. இங்கு துயரமே தரு என்பதற்கேற்பப் பிறழவைத்தார்.

பெரும்பாலும் பதவுரையாகவே நடைபெறுகின்ற பன்னீராயிரப்படி "துயரமே—நிஷ்க்ருஷ்ட பரிதாபத்தையே, தரு—தாக்கடவதான, துன்பம்—துக்கத்துக்கும், இன்பம்—துக்கசாத்யத்வ துக்கமிச்ரத்வ, துக்கோதர்க்கத்வ விசிஷ்டமாகையாலே நிஷ்க்ருஷ்ட பரிதாபகரமான சுகத்துக்கும் ஹேதுவான வினைகளாய் பாபரூபமாயும் புண்யரூபமாயுமுள்ள கருமங்களுக்கு நிர்வாஹனாய்" என்று உள்ளபடியே உரைக்கப்படுகிறது. இதனைத் தாகளன் தமக்கு வேண்டியவாறு மாற்றிக்காட்டியிருக்கிறார். ஒரு தவற்றை நிலைநாட்டுதற்குப் பல தவறுகள் வேண்டுமன்றோ? ஈட்டிலும் "துன்ப வினையோடு இன்பவினையோடு வாசியற இரண்டும் துக்கத்தையே பண்ணித்தருமென்றுயிற்று இருக்கிறார் இவர்; பகவத்சேஷத்வ விரோதியாய்க்கொண்டு பந்தமாகை இரண்டுமொக்குமிறே" என்று கூறப்படுகிறது. இவற்றால் "துயரமே தரு துன்பவினைப வினைகளாய்" என்றே பாடங்கொள்ளப்பட்டிருக்கிறதென்பதொரு தலை. இன்பவினையும் துக்கத்தைத் தருமென்பது ஆழ்வார் திருவுள்ளமென்று ஈட்டுரைகாரர் விளக்குவதைக் தாகளன் தம் கருத்துக்கு அநுகூலமாக்கிக் கொள்ளுகிறார் துயரமேதரு என்றதனோடு இன்பமென்பது நேரே தொடராமல் இடையிட்டு இருப்பதினாலேயே இவ்விளக்கம் வேண்டிவந்தது. துயரமே தரு இன்பம் என்றிருந்தால் இவ்விளக்கம் வேண்டிற் பாலதன்று இதனாலேயே தாகளன் கொள்கை தவறுதல் காணலாம்.

இன்னமும் "துயரமே தரு துன்பவின்பவினைகளாயவை யல்லனாய்" என்றதிலுள்ள ஓசையினிமையும் தாகளன் பாடத்திவில்லாமை அறிஞர் ஊகித்துக்கொள்ளலாம். "துயரமேதரு" என்பது

னோடு "இன்பம்" என்ற சொற் சேரும்போது சந்தியிற் பல இடர்ப்பாடுகள் நேருதலையும் துகளன் உணர்ந்தாரில்லையென்றே தோன்றுகிறது.

இதுவரையுங் கூறியவாற்றால் துகளன் திருவாய்மொழியின் பாடபேத விஷயமாய்க் கூறியவற்றுள் ஒன்றேனும் ஒப்புக்கொள்ளத்தக்கதில்லையென்று நிரூபிக்கலாயிற்று. தமிழ் வேதமென்று பாராட்டிப் பூர்வாசார்யர்கள் காலந்தொடங்கி இன்றளவும் சிரஸாவகித்துப் பொன்னே போற்றி வரப்பட்டு உபதேச பரம்பரையில் நடைபெற்று வருகின்ற திருவாய்மொழி முதலிய திவ்யப்ரபந்த விஷயங்களில் மனம் போனவாறு சிறிதும் ஆலோசனையின்றி மூலங்களிலும் உரைகளிலும் துகளன் தமது கற்பனைகளை ஏறிடுதல் பெரிதும் வருந்தத்தக்கதே. இனி துகளன் இதுபோன்ற வழியிற்சென்று இடர்ப்பட்டுத் தமது புனை பெயரை உண்மைப் பெயராக்கிக் கொள்ளாதிருப்பரென்று நம்புகிறோம்.

R. இராமையங்கார்,
தலைமைத் தமிழாசிரியர்
ஸௌராஷ்ட்ர ஹைஸ்கூல், மதுரை

ஸ்ரீ

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌯 𑌨𑌮𑌃

ஸ்ரீ பாஷ்யகார மங்களாசாஸநம்.

𑌶𑍍𑌰𑍀𑌪𑌰𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑌪𑌾𑌦𑌾𑌬𑍍𑌜𑌚𑌞𑍍𑌚𑌰𑍀𑌕𑍃𑌤𑌮𑍌𑌲𑌯𑍇 ।
𑌶𑍍𑌰𑍀𑌵𑌤𑍍𑌸𑌚𑌿𑌹𑍍𑌨𑌨𑌾𑌥𑌾𑌯, 𑌯𑌤𑌿𑌰𑌾𑌜𑌾𑌯𑌮𑌙𑍍𑌗𑌲𑌮𑍍 ॥
ஸ்ரீபராங்குசபாதாப்ஜ, சஞ்சரீக்ருதமௌளயே
ஸ்ரீவத்ஸசின்னநாதாய, யதிராஜாயமங்களம்.
𑌨𑌾𑌥𑌪𑌦𑍍𑌮𑌾𑌕𑍍𑌷𑌰𑌾𑌮𑌾𑌰𑍍𑌯, 𑌪𑌾𑌦𑌪𑌙𑍍𑌕𑌜𑌸𑍇𑌵𑌿𑌨𑍇 ।
𑌸𑍇𑌵𑍍𑌯𑌾𑌯𑌸𑌰𑍍𑌵𑌯𑌮𑌿𑌨𑌾𑌂, 𑌯𑌤𑌿𑌰𑌾𑌜𑌾𑌯𑌮𑌙𑍍𑌗𑌲𑌮𑍍 ॥
நாதபத்மாக்ஷராமார்ய பாதபங்கஜஸேவிநே;
ஸேவ்யாயஸர்வயமிநாம் யதிராஜாயமங்களம்.

𑌪𑍂𑌰𑍍𑌣𑌾𑌰𑍍𑌯𑌪𑍂𑌰𑍍𑌣𑌕𑌰𑍁𑌣𑌾, 𑌪𑌾𑌤𑍍𑌰𑌾𑌯𑌾𑌮𑌿𑌤𑌤𑍇𑌜𑌸𑍇 ।
𑌮𑌾𑌲𑌾𑌧𑌰𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌯𑌾𑌸𑍍𑌤𑍁, 𑌯𑌤𑌿𑌰𑌾𑌜𑌾𑌯𑌮𑌙𑍍𑌗𑌲𑌮𑍍 ॥ ௩

பூர்ணார்யபூர்ணகருணா பாத்ராயாமிததேஜஸே;
மாலாதரப்ரியாயாஸ்து, யதிராஜாயமங்களம்.

𑌸𑌂𑌸𑍇𑌵𑍍𑌯𑌯𑌾𑌮𑍁𑌨𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌂, 𑌏𑌕𑌲𑌵𑍍𑌯𑍋𑌽𑌸𑍍𑌮𑍍𑌯𑌹𑌂𑌗𑍁𑌰𑍋𑌃 ।
𑌅𑌨𑍍𑌯𑌨𑍍𑌨𑍇𑌤𑌿𑌵𑌦𑍇𑌤𑌨𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 (?) 𑌯𑌤𑌿𑌰𑌾𑌜𑌾𑌯𑌮𑌙𑍍𑌗𑌲𑌮𑍍 ॥ ௪

ஸம்ஸேவ்யயாமுநாசார்யம் ஏகலவ்யோஸ்ம்யஹம்குரோ:;
அன்யந்நேதிவதேதந்நித்யம் (?) யதிராஜாயமங்களம.

𑌶𑍍𑌰𑍀𑌕𑌾𑌞𑍍𑌚𑍀𑌪𑍂𑌰𑍍𑌣 𑌮𑌿𑌶𑍍𑌰𑍋𑌕𑍍𑌤, 𑌰𑌹𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌵𑌿𑌦𑍇𑌸𑌦𑌾 ।
𑌦𑍇𑌵𑌰𑌾𑌜𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌯𑌾𑌸𑍍𑌤𑍁 𑌯𑌤𑌿𑌰𑌾𑌜𑌾𑌯𑌮𑌙𑍍𑌗𑌲𑌮𑍍 ॥ ௫

ஸ்ரீகாஞ்சீபூர்ணமிச்ரோக்தர ஹஸ்யார்த்தவிதேஸதா
தேவராஜப்ரியாயாஸ்து யதிராஜாயமங்களம்.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌗𑍋𑌷𑍍𑌠𑍀𑌪𑍂𑌰𑍍𑌣 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌂𑌕𑍁𑌰𑍍𑌵𑌤𑍇𑌮𑍁𑌦𑌾 ।
𑌶𑍍𑌲𑍋𑌕𑌾𑌰𑍍𑌥𑌂𑌕𑍁𑌰𑍍𑌵𑌤𑍇𑌤𑌸𑍍𑌮𑍈, 𑌯𑌤𑌿𑌰𑌾𑌜𑌾𑌯𑌮𑌙𑍍𑌗𑌲𑌮𑍍 ॥ ௬

ஸ்ரீமத்கோஷ்டீபூர்ணதிவ்பாஜ்ஞாம்குர்வதேமுதா
ஸ்லோகார்த்தம்குர்வதேதஸ்மை யதிராஜாயமங்களம்.

𑌕𑍂𑌰𑍇𑌶𑌗𑍁𑌰𑍁𑌕𑌾𑌨𑍍𑌤𑌾𑌦𑌾𑌶𑌰𑌥𑍍𑌯𑌾𑌦𑌿𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌃 ।
𑌯𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌯𑌾𑌃 𑌸𑌂𑌤𑌿𑌤𑍇𑌤𑌸𑍍𑌮𑍈𑌯𑌤𑌿𑌰𑌾𑌜𑌾𑌯𑌮𑌙𑍍𑌗𑌲𑌮𑍍 ॥ ௭

கூரேசகுருகாநததாசரத்யாதிதேசிகா:
யச்சிஷ்யா:பாந்திதேதஸ்மை யதிராஜாயமங்களம்.

𑌚𑌰𑌮𑌶𑍍𑌲𑍋𑌕𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌂, 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌂𑌵𑌿𑌲𑌙𑍍𑌘𑍍𑌯𑌚 ।
𑌦𑌦𑍌𑌤𑍇𑌭𑍍𑌯𑌃𑌸𑍍𑌵𑌶𑌿𑌷𑍍𑌯𑍇𑌭𑍍𑌯𑍋, 𑌯𑌤𑌿𑌰𑌾𑌜𑌾𑌯𑌮𑌙𑍍𑌗𑌲𑌮𑍍 ॥ ௮

சரமஸ்லோகதத்வார்த்தம்ஜ்ஞாத்வார்யாஜ்ஞாமவிலங்க்யச
ததௌதேப்ஸ்வஸிஷேப்யோயதிராஜாயமங்களம்.

𑌶𑍍𑌰𑍀𑌶𑍈𑌲𑌪𑍂𑌰𑍍𑌣𑌕𑍃𑌪𑌯𑌾, 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌾𑌯𑌣𑌮𑌰𑍍𑌥𑌤𑌃 ।
𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌯𑍇𑌨𑌶𑍍𑌰𑍁𑌤𑌂𑌤𑌸𑍍𑌮𑍈, 𑌯𑌤𑌿𑌰𑌾𑌜𑌾𑌯𑌮𑌙𑍍𑌗𑌲𑌮𑍍 ॥ ௯

ஸ்ரீசைலபூர்ணக்ருபயா,ஸ்ரீராமாயணமர்த்தத:
பத்த்யாயேனஸ்ருதம்தஸ்மையதிராஜாயமங்களம்.

ஶங்கராதிகுத்ருஷ்டீநாம், பாஹ்யாநாம்மதநாயகை: |
ஶ்ரீபாஷ்யம்குர்வதே தஸ்மை, யதிராஜாயமங்களம் || ௧௰

சங்கராதிகுத்ருஷ்டீநாம்,பாஹ்யாநாம்மதநாயகை;
ஸ்ரீபாஷ்யம்குர்வதே தஸ்மை யதிராஜாயமங்களம்.

குர்வந்நுபநிஷத்பாஷ்யம், ஜகத்ரக்ஷாம்கரோதிய: |
த்ரய்யாபரதந்த்ராய, பாஷ்யகாராயமங்களம் || ௧௧

குர்வந்நுபநிஷத்பாஷ்யம்ஜகத்ரக்ஷாம்கரோதிய:
த்ரய்யாபரதந்த்ராய பாஷ்யகாராயமங்களம்.

த்ராவிடோபநிஷத்பாஷ்யாம், வதேதிமுநிநாஜ்ஞயா |
ஶாஸிதைககுருகேஶாந்தம், பாஷ்யகாராயமங்களம் || ௧௨

த்ராவிடோபநிஷத்பாக்யாம், வதேதிமதநாஜ்ஞயா;
சாஸிதகுருகேசம்தம் பாஷ்யகாராயமங்களம்:

கத்வாதுஶாரதாபீடம், வ்ருத்திம்போதாயநஸ்யச |
அவலோக்யாகதாயாஸ்து, பாஷ்யகாராயமங்களம் || ௧௩

கத்வாதுசாரதாபீடம், வ்ருத்திம்போதாயநஸ்யச
அவலோக்யாகதாயாஸ்து, பாஷ்யகாராயமங்களம்.

யாதவஞ்சஹ்ருஷாவாதி, வாதிஸம்ஹாரகாரிணே |
தஸ்மைபகவதேஶ்ரீமத்பாஷ்யகாராயமங்களம் || ௧௪

யாதவஞ்சஹ்ருஷாவாதி வாதிசம்ஹாரகாரிணே
தஸ்மைபகவதே ஸ்ரீமத் பாஷ்யகாராயமங்களம்.

ஶ்ரீரங்கநாதபூர்ணாய, ஶ்ரீபாஷ்யம்வததேஸகம் |
விசித்ரஸம்பத்ஸுதஸ்யாபி (?) பாஷ்யகாராயமங்களம் || ௧௫

ஸ்ரீமத்ரங்கபூர்ணாய, ஸ்ரீபாஷ்யம்வததேதஸ்மைகா;
மித்ரேஸம்பத்ஸுதஸ்யாபி (?) பாஷ்யகாராயமங்களம்.

தத்வாவ்ருஷகிரீஶஸ்ய, ஶங்கசக்ரேராமாதித: |
பரமப்ரீதிபக்தாய, பாஷ்யகாராயமங்களம் || ௧௬

தத்வாவ்ருஷகிரீசஸ்ய, சங்கசக்ரேராமாதித:
பரமப்ரீதிபக்தாய, பாஷ்யகாராயமங்களம்.

ஸந்யாஸம் குர்வதே காஞ்ச்யாம், அநந்தஸரஸீதடே |
வரதேந்யஸ்தஸந்யாஸாய, பாஷ்யகாராய மங்களம் || ௧௭

சந்யாசம்குர்வதே காஞ்ச்யாமனந்தஸரசீதடே
வரதேந்யஸ்தபாராய, பாஷ்யகாராயமங்களம்.

ஸ்ரீமத்பூதபுரே ஸ்ரீமத்கேசவயஜ்வந: |
காந்திமத்யாம் ப்ரஸூதாய, யதிராஜாய மங்களம் || ௧௮

ஸ்ரீமங்கலாபூதபுரீ ஸ்ரீமத்கேசவயஜ்வந:
காந்திமத்யாம்ப்ரஸூதாய யதிராஜாயமங்களம்.

ஸேஷோவா ஸைந்யநாதோவா, ஸ்ரீபதிர்வேதிஸாத்விகை: |
விதர்க்யாய மஹாப்ராஜ்ஞை:, யதிராஜாய மங்களம் || ௧௯

சேஷோவாஸைந்யநாதோவா, ஸ்ரீபதிர்வேதிஸாத்விகை:
விதர்க்யாயமஹாப்ராஜ்ஞை: யதிராஜாயமங்களம்.

ப்ரக்ருஷ்டகுணபூர்ணாய, ப்ராப்யாய ஸ்வாங்க்ரிஸேவிநாம் |
ப்ரபந்நஸார்த்தவாஹாய, யதிராஜாய மங்களம் || ௨௦

ப்ராக்ருஷ்டகுணபூர்ணாய, ப்ராப்யாபஸ்வாங்க்ரிஸேவிநாம்
ப்ரபந்நஸார்த்தவாஹாய, யதிராஜாயமங்களம்.

வேதாந்த ஸஹப்ரமாணேந, ஸாத்விகைஸ்ஸ்வ ப்ரமாத்ருபி: |
ப்ரமேயேண ஸஹ ஸ்ரீமாந், வர்த்ததாம் யதிசேகர: || ௨௧

வேதாத்மஹப்ராமாணேன (?) சாத்விகைச்ப்ரமாத்ருபி:
ப்ரமேயணஸஹ ஸ்ரீமாந்வர்த்ததாம்யதிசேகர:

ஸந்ததிஸ்ரீரஸ்து ஸமஸ்தமங்களாநி ஸந்து |
நித்யஸ்ரீரஸ்து நித்யமங்களாநி ஸந்து || ௨௨

சந்ததிஸ்ரீரஸ்து, சமஸ்தமங்களாநிபவந்து
நித்யஸ்ரீரஸ்து நித்யமங்களாநிபவந்து.

ஸ்ரீபாஷ்யகாரமங்களாசாஸநம் ஸம்பூர்ணம் ||

குன்னூர், தி. அ. எதிராஜுலுதாஸர்,
கேட்டுக்கொண்டபடி இஃது வெளியிடலாயிற்று.

நன்கொடை.

நமது திவாகரம் நீண்ட காலம் நிலைபெற்று விளங்குவதற்குப் பலரும் ஸம்ரக்ஷகராகவும், போஷகராகவும், ஜீவித சந்தாதார்களாகவும் சேர்ந்து ஆதரிக்கவேண்டுமென்று பன்முறை வேண்டிக்கொண்ட அவ்வேண்டுகோள் பலனுடையதாமாறு கீழ்க்குறிப்பிடப்பெற்றவர்கள் ஜீவித சந்தாதார்களாகச்சேர்ந்துள்ளார்கள். இவர்கள் இம்மை அம்மை வீடென்ற மும்மைப் பலன்களைப்பெற்று இன்புறுமாறு எம்பெருமானை என்றும் வழுத்துவோமாக.

ஜீவித சந்தாதார்கள்.

(1) ஸ்ரீமாந் எரிவிண்ணூர் கோனேட்டி வேலப்ப நாயக்கர் குமாரர் சுப்பா நாயுடு Avl. ராகலவாவி, வேலூர் ... ... ரூ. 25

(2) ,, மத்திண்ணூர் திருப்பதி நாயக்கர் குமாரர் மணியம் ரெங்கஸாமி நாயக்கர் Avl ஷை யூர் ... ... ரூ. 25

(3) ,, ஸ்ரீநிவாஸ நாயுடு Avl. கோவிந்தாபுரம். தாராபுரம் P O. ... ... ரூ. 25

(4) ,, கோ. இராமச்சந்திர நாயுடு Avl கோவிந்தாபுரம் ஷை ... ... ரூ. 25

(5) ,, எரிவிண்ணூர் நல்லமுத்து நாயக்கர், குமாரர் வேலுச்சாமி நாயக்கர் Avl. வேலூர் உடுமலைப்பேட்டை தாலூகா. ரூ. 25

(6) ,, தி. அ. எதிருஜுலு நாயுடு, Avl. சீப் டிக்கட் எக்ஸாமினர் குன்னூர் R. S. ரூ. 25